


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கபட்ட புதிய பூங்காவினை இன்று (29.08.2016) திறந்து வைத்தார்கள்.
மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. டி.கெட்சி லீமா அமலினி ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 580/2016 நாள்: 29.08.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்**
**மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் புதிய பூங்கா இன்று (29.08.2016) திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவினை இன்று (29.08.2016) திறந்து வைத்து பார்வையிட்டார்கள். இந்த பூங்காவனது, தினந்தோறும் பல்வேறு பணிகளுக்காக, வருகை புரியும் பொதுமக்கள் நலனுக்காகவும், சுற்றுச்சூழல் தூய்மையை பராமரிக்கவும், பசுமை செறிவை அதிகரிக்கும்வகையில், அமைக்கப்பட்டுள்ளது.

வளாகத்தில் இருந்த மரங்கள் நன்கு வளருவதற்கும், புதிதாக நடப்பட்டிருக்கும் பல வண்ணச் செடிகளும், கொடிகளும் நன்கு வளர்ந்து, பசுமை காட்சியளிப்பதற்கும், பூத்துக்குலுங்குவதற்கும் ஏதுவாக தெளிப்புநீர், நுண்ணீர் பாசன அமைப்புகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. மெக்சிகன்புல் மற்றும் ப.ஃபலோ புல் ஆகிய இருவகை புல்களும் அவற்றுக்கு பொருத்தமான இடங்களில் நடப்பட்டிருப்பது பச்சைப்பசேல் என காட்சியளிக்கிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தினை சுற்றிலும் மற்றும் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலகம், மாவட்ட ஊனமுற்றோர் நல அலுவலகங்களை சுற்றிலும் பலவகை மரங்களும், செடிகளும் நடப்பட்டு, அவற்றுக்கும் தெளிப்புநீர், நுண்ணீர் பாசன அமைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் பயன்பாட்டுக்காக மரங்களை சுற்றி கட்டுமானம் செய்யப்பட்டு, இருக்கை வசதி செய்து அழகுபடுத்தி, அந்த மரங்களின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கேன்டீன் அருகிலும் புல்தரை அமைத்து பலவகை தாவரங்கள் நடப்பட்டுள்ளதோடு, புதிய இருக்கை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவுபடி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) திரு.எம்.நிஜாமுதீன் அவர்கள் தலைமையில், தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.அசோக்மேக்ரின் அவர்கள் புதுமையான முறையில் வடிவமைத்து ஏற்கனவே இருந்த மரங்களுக்கு இடையே பொருத்தமான செடி, கொடிகளை தேர்வு செய்து நடவு செய்தும் புற்களை பரப்பியும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)

திரு.பொ.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சியர் அலுவலக உசூர் மேலாளர்(பொது) திரு.எம்.வி.சஜித் மற்றும் உதவி இயக்குநர் கனிமம் திரு. குருசாமி ஆகியோர் ஒத்துழைப்போடு இந்த பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் விழுப்புரம் மாவட்டம் திருவக்கரை என்ற இடத்தின் அருகில் கண்டெடுக்கப்பட்ட 2 மரப்படிமங்கள் (2 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய மரங்கள் கல்லாக மாறி உருவானவை) காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

வருவாய்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் பங்களிப்போடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.4 இலட்சம் செலவில் இந்த பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.

இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இந்த பூங்காவின் திறப்புவிழா நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. கெட்சிலீமாஅமலினி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு.பொ.இராஜேந்திரன் (பொது), திரு.எம். நிஜாமுதீன் (வேளாண்மை), திரு.லட்சுமிநாராணயன் (கணக்கு), மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு.நா. இளங்கோ, உசூர் மேலாளர் திரு. எ.வி.சஜீத், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. எ.வி. மூர்த்தி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு. மணிசேகரன், உதவி செயற்பொறியாளர் திரு. ரன்ஸ், உதவிப்பொறியாளர் திரு. டேனியல், தோட்டக்கலை துணை இயக்குநர் திரு. அசோக்மேக்ரின், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர் திரு. சுரேஷ்ஜோஸ், கனிமவளத்துறை உதவி இயக்குநர் திரு.குருசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.